**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**
Case No.CC.38/2020
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : ராமசாமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of May 2023.

26.05.2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. 1 மற்றும் 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். 2019ம் வருடம் 2ம் மாதம் எனக்கும் எனது மனைவிக்கும் சண்டை நடந்தது. என் தங்கையை ஏன் அடிக்கிறாய் என்று கூறி கம்பி, கம்புடன் என்னை அடிக்க 1 முதல் 3 எதிரிகள் வந்தார்கள். அப்போது சண்முகவேலும், பாலகிருஷ்ணனும் விலக்கிவிட்டார்கள். அப்போது 1ம் எதிரி ராமமூர்த்தியும், 2ம் எதிரி கிருஷ்ணனும் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. எனது பெரியப்பா மகள் லெட்சுமிக்கும் சண்டையை விலக்கும்போது காயம் ஏற்பட்டது.

2) இதுகுறித்து கீழத்தூவல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதபடிக்கத் தெரியாது என்று சொன்னால் சரிதான். கையொப்பம் மட்டும் தான் செய்வேன். அசா.ஆ.1 புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிரி ராமமூர்த்தியின் தங்கை எனது மனைவி என்று சொன்னால் சரிதான். எனக்கும் எனது

மனைவிக்கும் குடும்பத்தில் கருத்துவேறுபாடு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2) அதனால் நான் ஒருநாள் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு தற்கொலைக்கு முயற்சி செய்து காயத்துடன் நான் தப்பித்தேன் என்று சொன்னால் சரிதான். இதுகுறித்து தான் 1ம் எதிரி என்னிடம் வந்து கேட்டார் என்றால் சரிதான், சுனா, புனா என்று என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார். மேற்படி சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் சம்பவ நாளில் 1ம் எதிரி ராமமூர்த்தியை எனது வகையறாக்கள் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியதாக கீழத்தூவல் காவல்நிலையத்தில் குற்ற எண்.35/2019 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

3) அந்த குற்ற எண்ணில் நான் முன்ஜாமீன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி குற்ற எண்ணில் 6 நபர்கள் எதிரிகளாக உள்ளோம். நான் முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ள லெட்சுமி எங்கு வசித்து வருகிறார் என்றால் பொசுக்குடியில் வசித்து வருகிறார். லெட்சுமியை யார் குறிப்பாக தாக்கினார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். லெட்சுமி தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் சென்றார். நான் வழக்கிற்காக லெட்சுமி மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) போலிசார் எத்தனை முறை என்னை விசாரித்தார் என்றால் ஒரு முறை என்னை விசாரித்தார். போலிசாரிடம் முதல்விசாரணையில் கூறிய சங்கதியைத் தான் கூறினேன். மேற்படி எங்கள் மீது உள்ள வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக லெட்சுமிக்கு காயம் ஏற்பட்டதாக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2ம் எதிரி தரப்பில் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 309–ன் படி சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு 2ம் எதிரி சார்பாக குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.38/2020
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : பூர்ணவள்ளி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of May 2023.

<u>26.05.2023</u>

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. 1 மற்றும் 3ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். அசா.1 எனது கணவர். 24.04.2019ம் தேதி இரவு 08.00 மணியளவில் எனக்கும் எனது கணவர் அசா.1க்கும் நடைபெற்ற குடும்பத்தகராறு காரணமாக எனது அண்ணன் 1ம் எதிரி ராமமூர்த்தி எனது வீட்டிற்கு வந்தார். அப்போது பக்கத்துவீட்டுக்காரர்கள் பரத், சித்திரைவேலு, செல்வி, லெட்சுமி, கண்ணுச்சாமி ஆகியோர் வந்து எனது அண்ணன் 1ம் எதிரி ராமமூர்த்தியுடன் சண்டை போட்டார்கள். இது தொடர்பாக எனது கணவர் அசா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது கணவர் அசா.1 என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட பிரச்சனைக்காகத்தான் எனது அண்ணன் 1ம் எதிரி ராமமூர்த்தி வந்தார் என்றால் சரிதான். 1ம் எதிரி ராமமூர்த்திக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை 2ம் எதிரிக்கும் தான் காயம் ஏற்பட்டது.

லெட்சுமிக்கு காயம் ஏற்பட்டது பற்றி எனக்கு தெரியாது. அசா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி தரப்பில் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 309–ன் படி சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு 2ம் எதிரி சார்பாக குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.